(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, TIRUCHENGODE
**CC.No.489/2025**

Deposition of Prosecution/Defence/Court Witness for PW.2 (LW.2) (Through VC)

| | | |
|---|---|---|
| Name | : | மாதேஸ்வரன் |
| Father's Name | : | பழனிவேல் |
| Village | : | ராசிபுரம் |
| Taluk | : | ராசிபுரம் |
| Occupation | : | தலைமைக்காவலர் |
| Age | : | 37 |

(எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சி விசாரிக்கப்படுகிறார் )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act of 1969) on the day of **23.06.2026.**

**முதல் விசாரணை:–**

1) நான் தற்பொழுது ராசிபுரம் காவல் நிலையத்தில் த.காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 17.09.2025 – ம் தேதி 6.00 மணியளவில் மதுவிலக்கு ரோந்து அலுவல் சம்பந்தமாக திருச்செங்கோடு மதுவிலக்கு அமல் பிரிவு காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளர் திருமதி.பிரபாவதி ஆகியோர்களுடன் நானும் மற்றும் போலீஸ் பார்டி த.கா.வீரமணி ஆகியோர்களுடன் திருச்செங்கோடு நகர காவல் நிலைய சரகம் சேலம் ரோடு ஆலமரம் டாஸ்மாக் பின்புறம் கண்காணித்து கொண்டிருந்தபோது ஒரு நபர் எங்களை கண்டதும் தப்பி ஓட முயன்றவரை சந்தேகத்தின் பேரில் அவரை பிடித்து விசாரிக்க அவர் தன் பெயர் வெங்கடேஷ் என்றும் அவர் தன் கையில் வைத்திருந்த பையை சோதனை செய்த போது 180 ml அளவு கொண்ட Black Pearl BRANDY – 27பாட்டில்கள் இருந்தன. காவல் ஆய்வாளர் அவரை விசாரிக்க அவர் மேற்படி மது பாட்டில்களை டாஸ்மார்க் கடையில் வாங்கி சுய லாபத்திற்கு அதிக விலைக்கு விற்பதற்காக வைத்திருந்ததாக தான் செய்த குற்றத்தை ஒப்புக்கொண்டவரை காவல்படுத்தி பொதுமக்கள் யாரும் சாட்சியம் அளிக்க முன்வராத காரணத்தினால்

எங்கள் முன்னிலையில் 6.30 மணியளவில் கைப்பற்றுதல் மகசரில் மேற்படி வழக்கு சொத்துக்களை கைப்பற்றினார். அதில் நானும், வீரமணி என்பவரும் சாட்சியாக கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையெழுத்து என்னுடையது தான். பின்னர் எதிரியை நிலையம் அழைத்து வந்து நிலைய குற்ற எண். 274/2025 ச/பி. 4(1)(C) TNP Amendement Act-ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார். பின்னர் கைப்பற்றிய அரசு மதுபான பாட்டில்களை G.O M.S) No.39, Dtd 22.10.2019 Home prohibition and excise (VIII) Department ன் படி உதவி ஆணையாளர் கலால், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், நாமக்கல் மாவட்டம் அவர்களின் மேல் நடவடிக்கைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து கைப்பற்றிய மதுபாட்டில்களை கலாலுக்கு அனுப்பிவைக்கப்பட்டது. ஆஜர் எதிரி தான் வெங்கடேஷ் ஆவார். இது சம்பந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் பொதுமக்கள் யாரும் மதுபானம் விற்பனை நடைபெறுவதாக எங்களுக்கு தகவல் சொல்லி அதன் பேரில் நாங்கள் சென்றோமா என்றால் இல்லை. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் தனியாருக்கு சொந்தமான இடம் என்றால் சரிதான். மேற்படி இடத்திற்கு சொந்தமான நபரை காவல் ஆய்வாளர் விசாரித்தாரா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் எத்தனை மதுபான பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது என்றால் 180 ml அளவு கொண்ட 180 ml அளவு கொண்ட -27 பாட்டில்கள் கைப்பற்றப்பட்டது. கைப்பற்றப்பட்ட மதுபான பாட்டில்களை என்ன செய்தோம் என்றால் நாமக்கல் மாவட்ட கலால் பிரிவுக்கு மதுபான பாட்டில்களை அழிக்கவேண்டி அனுப்பிவைத்தோம். அவ்வாறு அனுப்புவதற்கு உத்தரவு பெற்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியும். கைப்பற்றப்பட்ட பாட்டில்கள் அரசு மதுபான பாட்டில்கள் என எவ்வாறு தெரிந்து கொண்டோம் என்றால் அந்த பாட்டில்களில் ஒட்டப்பட்டிருந்த ஸ்டிக்கரை வைத்து தெரிந்து கொண்டோம். மேற்படி மதுபான பாட்டில்களை கைப்பற்றப்பட்டதற்கு அந்த ஸ்டிக்கரையோ, பாட்டில்களையோ நீதிமன்றத்தில் ஒப்படைத்தோமா என்றால் இல்லை. எதிரியிடமிருந்து மதுபானபாட்டில்களை கைப்பற்றப்பட்டதற்கு புகைப்படமோ, வீடியோ பதிவோ எடுத்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்தோமா என்றால் இல்லை. எதிரி வைத்திருந்ததாக சொல்லப்படும் மதுபான பாட்டில்கள் எந்த கடையிலிருந்து

வாங்கப்பட்டது அந்த கடையின் எண் குறித்து விசாரித்து தெரிந்து கொண்டோமா என்றால் இல்லை. சம்பவ இடத்தில் பாட்டில்களை அடுக்கிவைத்திருந்தாரா என்றால் இல்லை ஒரு பையில் போட்டு வைத்திருந்தார். அந்த பையை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினோமா என்றால் கைப்பற்றினோம். கைப்பற்றுதல் மகசரில் அந்த பையின் விவரம் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு தான் நான் கையெழுத்து செய்தேன். சம்பவ இடத்தில் மாதிரி வரைபடம், பார்வை மகசர் ஆகியவற்றை காவல்  ஆய்வாளர் தயார் செய்தாரா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. இந்த வழக்கு புள்ளி விவர கணக்கிற்காக எதிரி மீது பொய்யாக தாக்கல் செய்யயப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு சொன்ன தேதி மற்றும் நேரத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. நான் சொன்னவாறு எதிரியிடமிருந்து எந்த மதுபான பாட்டில்களும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. பொதுமக்களோ, தனிநபரோ எதிரி மதுபானம் வைத்திருப்பதாகவோ, அதிக விலைக்கு விற்பதாக எங்களிடம் புகார் அளித்துள்ளார்களா என்றால் இல்லை. அரசு G.O மூலம் பாட்டில்களை கலால் அதிகாரியின் உத்தரவு பேரில் காவல் நிலைய பாதுகாப்பில் வைத்ததற்கான எவ்வித விவரமும் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான்.

**மறு விசாரணை –** இல்லை.

RANGARAJ P

Digitally signed by RANGARAJ P
Date: 2026.06.23 20:26:40 +0530